S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி ஜனவரி 10 * 2026 * மலர் -1 * இதழ்-223* VOL-1 * ISSUE-223 விலை ரூ.3 * பக்கம் -4

## பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற

# உங்கள் கனவு திட்டத்தை ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!




**சென்னை, ஜன.10**

பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் உங்கள் கனவை சொல்லுங்கள் என்ற திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் 'உங்க கனவை சொல்லுங்க' என்ற திட்டமும் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனவரி 6–ஆம் தேதி அன்று புதிய அறிவிப்பை வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:–

கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் "உங்க கனவ சொல்லுங்க" என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

"உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். இந்த களப்பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும்.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தமிழ்நாடு மின்ஆளுமை முகமை மூலம் தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

தன்னார்வலர்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றியப் பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன்கூடிய கனவு அட்டையினை வழங்குவர்.

இந்த அட்டை மூலம் www.uks.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கனவு / கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட பாடியநல்லூரில் தொடங்கி வைத்தார்.



## கேத்தி (தேர்வு நிலை) பேரூராட்சி
### நீலகிரி மாவட்டம்.
### 2021-22-ம் ஆண்டு முதல் 2024-2025-ஆம் ஆண்டு வரை மேற்கோள்ளப்பட்ட திட்டப்பணி விவரங்கள்



| வரிசை எண் | திட்டப்பணிகளின் பெயர் | 2021-2022 | | 2022-2023 | | 2023-2024 | | 2024-2025 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
| 1. | 15-வது நிதிக்குழு மான்ய திட்டம் - Tied Grant | 1 | 50.00 | 18 | 78.98 | 32 | 203.56 | 21 | 99.50 |
| 2. | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) | 1 | 56.30 | 2 | 49.80 | | | 1 | 5.77 |
| 3. | இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதித் திட்டம் | 4 | 11.30 | 14 | 110.40 | | | | |
| 4. | நமக்கு நாமே திட்டம் | 2 | 18.00 | | | 1 | 3.00 | 5 | 43.50 |
| 5. | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) | 3 | 70.20 | 6 | 164.30 | 3 | 43.00 | 4 | 67.00 |
| 6. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1 | 20.00 | | | 9 | 19.00 | 3 | 15.00 |
| 7. | தூய்மை இந்தியா திட்டம் | | | 1 | 88.50 | | | | |
| 8. | SUDF | | | 1 | 36.21 | | | | |
| 9. | தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (TURF) | | | 1 | 34.40 | 1 | 55.60 | 2 | 133.50 |
| 10. | பொது நிதித் திட்டம் (GF) | | | 1 | 7.60 | | | 24 | 55.00 |
| 11. | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | | | | | 2 | 15.00 | | |
| 12. | DORMANT FUND | | | | | 1 | 201.00 | | |
| 13. | சுவஸ்த் பாரத் மிஷன் 2.0 | | | | | 1 | 43.25 | | |
| 14. | நபார்டு திட்டம் | | | | | 1 | 116.00 | | |
| 15. | பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம் | | | | | 2 | 4.00 | 4 | 29.60 |
| 16. | ஜயோத்தி தாஸ் பண்டிதர் | | | | | | | 2 | 36.50 |
| | **மொத்தம்** | **12** | **225.80** | **46** | **570.19** | **53** | **703.41** | **66** | **485.37** |

திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

திரு. மணிகண்டன்,
உதவி இயக்குனர்,
பேரூராட்சிகள், உதகமண்டலம்.

திருமதி. ஹேமமாலினி,
பேரூராட்சித் தலைவர்,
கேத்தி பேரூராட்சி.

திருமதி. எஸ். புவனேஸ்வரி,
செயல் அலுவலர்,
கேத்தி பேரூராட்சி.

துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள்

## மறு ஆய்வுக்கு அனுப்பியது தவறு:

# 'ஜனநாயகன்' படத்திற்கு உடனே தணிக்கைச் சான்று!

## உயர்நீதிமன்றம் உத்தரவு!!

**சென்னை, ஜன.10**

'ஜனநாயகன்' படத்திற்கு உடனே தணிக்கை சான்று வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அதை மறு ஆய்வுக்கு அனுப்பியது தவறு என்றும் தெரிவித்துள்ளது.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கி பல்வேறு அரசியல் பொதுக்கூட்டங்களை நடத்தியுள்ளார். திரை வாழ்க்கையில் தனது கடைசி படம் என அறிவித்து ஜனநாயகன் படத்தில் நடித்துள்ளார்.



எச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள ஜனநாயகன் படம் ஜன 9ஆம் தேதி திரையரங்கில் வெளியாகும் என்று கூறப்பட்டிருந்தது. 2026 சட்டமன்ற தேர்தலை குறி வைத்து களமிறங்கியிருக்கும் விஜய்க்கு மக்கள் ஆதரவு கணிசமாக இருப்பதாக கூறப்படும் நிலையில், அவரது கடைசி படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு உள்ளது.

இந்நிலையில், வெளிநாடுகளில் சென்சார் சான்று கிடைத்து படம் திரையரங்க வெளியீட்டுக்கு தயார் நிலையில் இருந்துள்ளது. தமிழகம் உள்பட இந்தியாவின் பல மாநிலங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜனநாயகன் படத்திற்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கியது. புக்கிங் தொடங்கிய கொஞ்ச நேரத்தில் லட்சக்கணக்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன. ஆனால், கடைசி நேரத்தில் திடீர் திருப்பமாக, தணிக்கை சான்று கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஏற்கனவே கடந்த மாதம் ஜனநாயகன் திரைப்படத்தை பார்த்த தணிக்கைக் குழு (சென்சார் போர்டு) அதிகாரிகள் சில காட்சிகளை மட்டும் நீக்கி விட்டு படத்திற்கு யு/ஏ சான்று தருவதாக வாய்மொழியாக அறிவித்தனர். ஆனால், பட நிறுவனத்திற்கு சான்றிதழ் நேரில் வழங்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் படத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் காட்சி உள்ளது, ராணுவ இலச்சினை பயன்படுத்தப்பட்டுள்ளது போன்ற காரணங்களைக் கூறி கடைசி நேரத்தில் மறு தணிக்கை செய்ய வேண்டும் என்று சென்சார் போர்டு அதிகாரிகள் கூறியதால் சிக்கல் ஏற்பட்டது. படத்தை பார்த்த தணிக்கைக் குழுவில் ஒரு உறுப்பினர் மாறுபட்ட கருத்தை தெரிவித்து புகார் எழுப்பியதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இதையடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் படத் தயாரிப்பு நிறுவனம் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீது விசாரணை நடத்திய நீதிபதி இன்று தீர்ப்பு வழங்குவதாக அறிவித்திருந்தார். அதன்படி நேற்று காலை தீர்ப்பளிக்கப்பட்டது. ஜனநாயகன் படத்திற்கு உடனே தணிக்கை சான்று வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். இந்தப் படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பியது தவறு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் படக்குழுவினர் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். ஏற்கனவே சிக்கல் ஏற்பட்டதால் 9–ஆம் தேதி வெளியிட முடியாது என்றும், அது தள்ளிவைக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள்.

இப்போது நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதால் புதிய தேதியை விரைவில் அறிவிக்க உள்ளனர். இது ஒருபுறம் இருக்க ஜனநாயகன் படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைக்கும் முன்பே பல்வேறு ஊர்களிலும் திரையரங்குகளில் சிறப்பு காட்சிகளுக்கும் முன்பதிவு செய்யப்பட்டன.

ஆனால் தள்ளிவைக்கப்பட்டதால் டிக்கெட்டுகளை திருப்பி அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



சென்னையில் அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று சந்தித்து பூங்கொத்து கொடுத்தார். தேர்தல் கூட்டணி தொடர்பாக இரு கட்சிகள் இடையே பேச்சு வார்த்தை நடந்தது.




## ஈரோட்டில் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கம்: அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்!

ஈரோடு, ஜன.10

ஈரோடு மாநகராட்சி, மாணிக்கம்பாளையம் வீரப்பன்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலை கடையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு தைப்பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கப்பணத்தை வழங்கினார். தமிழக முதலமைச்சரின் உத்தரவின் படி மாநிலம் முழுவதும் பொங்கல் பரிசு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, ஈரோட்டில் இந்த விநியோகப் பணிகளை அமைச்சர் தொடங்கி வைத்துப் பயனாளிகளுக்குப் பொங்கல் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா, ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டல தலைவர் காட்டுசப்பு என்கிற மு.ப.சுப்ரமணியம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்படப் பலர் முன்னிலை வகித்தனர். விநியோகப் பணிகள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் தடையின்றி நடைபெற உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்த நிகழ்ச்சியின் போது தெரிவிக்கப்பட்டது.



தமிழ்நாடு உறுதிமொழி குழுவின் தலைவர் எம்எல்ஏ, சேலம் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள, மோப்பநாய் பிரிவு அலுவலகத்தை வேல்முருகன் எம்எல்ஏ தலைமையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். ஆய்வுப் பணியின் போது, கலெக்டர் பிரிந்தா தேவி, சேலம் மாநகர காவல் ஆணையர் அணில்குமார் கிரி மற்றும் காவல் உயர் அதிகாரிகளிடம், மோப்பநாய் பிரிவு செயல்படும் விதம் குறித்து கேட்டறிந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கியதை தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை, கூட்டுறவு நியாய விலைக் கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகள் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்கள்.



சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொளத்தூர் பகுதியில் உள்ள, சானாபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில், தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம், மாணவ, மாணவிகளுக்கு, விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

## கோவை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை திடீர் சாவு!

கோவை, ஜன.10

கோவை ராமநாதபுரம் பெருமாள் கோயில் வீதியை சேர்ந்தவர் முரளி வேல். இவரது மனைவி வரத லட்சுமி (23). இவர்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் 20ம் தேதி கோவை அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது.

இந்த நிலையில் குழந்தைக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது. வயிற்று வலி மற்றும் அதிக வியர்வையால் பாதிக்கப்பட்ட குழந்தை தொடர்ந்து அழுதது. இதனால் கவலை அடைந்த வரத லட்சுமி குழந்தையை அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்.

அதன் பிறகு குழந்தைக்கு பால் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போது குழந்தை மயங்கியதாக தெரிகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த வரத லட்சுமி கோவை அரசு மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றுள்ளார். அங்கு குழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதனால் வரத லட்சுமி கதறி அழுதார். இதுகுறித்து கோவை ரேஸ் கோர்ஸ் போலீசார் வழக்கு பதிவு செய்து குழந்தை இறந்தது எப்படி என்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போச்சம்பள்ளியில் மூதாட்டி உடலை வாங்க கிராம மக்கள் எதிர்ப்பு!



கிருஷ்ணகிரி, ஜன.10

போச்சம்பள்ளி அடுத்த சிப்காட் அருகே உள்ள கொல்லப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் உடலை கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மாவட்ட ஆட்சியரிடம் உடலை புதைக்க இடம் கேட்டு இன்னோவா காரில் மூதாட்டியின் சடலத்தை எடுத்துச் சென்ற பொழுது வருவாய் துறையினர் மற்றும் காவல் துறையினர் நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தி வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

கிருஷ்ணகிரி மாவட்டம் சிப்காட் அடுத்த ஆனந்தூர் அருகே உள்ள கொல்லப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ராஜீ என்பவர் மனைவி கண்ணம்மாள் 98 வயதான இவர் கடந்த சில நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கண்ணம்மாள் இரவு 12 மணியளவில் உயிரிழந்த நிலையில் அவரது உடலை அடக்கம் செய்ய ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள சுமார் ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள வாரி புறம்போக்கு நிலத்தில் உடலைப் புதைக்க ஏற்பாடுகள் நடந்த நிலையில் அந்த புறம்போக்கு இடத்தை ஒட்டி உள்ள தனிநபருக்கு சொந்தமான பட்டா இடத்திற்கு இடையூறுகள் ஏற்படும் எனவும் அதற்கு கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மூலமாக எதிர்ப்பு தெரிவித்ததாக தெரிகிறது.

இதுகுறித்து கண்ணம்மாள் உறவினர்கள் வருவாய்த் துறையினர் மற்றும் காவல்துறையினரிடம் புகார் அளித்த நிலையில் இன்று மதியம் ஒரு மணி வரை பேச்சுவார்த்தையில் சுமூகம் ஏற்படாத நிலையில் இறந்தவரது உடலை அவர்களது இனோவா காரில் எடுத்துக்கொண்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரிடம் இறந்தவரது உடலை அடக்கம் செய்ய இடம் ஒதுக்கி தர வேண்டும் என மனு அளிக்க இறந்தவர் சடலத்துடன் காரில் புறப்பட்டு சென்றனர்.

இது குறித்து தகவல் அறிந்த ஊத்தங்கரை டிஎஸ்பி சீனிவாசன் தாசில்தார் ராஜலட்சுமி மற்றும் போலீசார் வருவாய்த்துறையினர் காரை குறுக்கு போட்டு சிப்காட் பகுதியில் கடந்த இரண்டு மணி நேரமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இதில் நிரந்தரமாக எங்கள் கிராமத்திற்கு சுடுகாடு வழங்கப்பட வேண்டும்.

## கோவை கலெக்டரிடம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மனு!



கோவை,ஜன,10

அ.தி.மு.க. வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள குறைகளையும், தவறுகளையும் சுட்டிக்காட்டி கோவை மாநகர மாவட்ட கழக செயலாளரும், வடக்கு சட்டமன்ற உறுப்பினருமான அம்மன் கே. அர்ச்சுணன், கழக பேரவை இணை செயலாளரும் சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஆர்.ஜெயராம் ஆகியோர் கோவை மாவட்ட கலெக்டரும் தேர்தல் அலுவலருமான பவன்குமாரிடம் மனு அளித்தனர். அந்த மனுவில் தெரிவித்ததாவது;எஸ்ஐஆர் பணி முடிந்தவுடன் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டின் படி பல பாகங்களில் வெவ்வேறு வார்டுக்கான வீதிகள் பகுதிகளை சேர்த்துள்ளீர்கள். அதனால் வாக்காளர்களுக்கு வாக்களிக்க செல்லும் பொழுது பல சிரமங்கள் ஏற்படும். எனவே அந்தந்த வார்டுகளுக்கான வீதிகள் பகுதிகளை அந்தந்த வார்டுகளுக்குள் உள்ள பாகங்களில் சேர்த்து வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் எங்களது கட்சியினரின் களப்பணியின் மூலம் சரிபார்க்கப்பட்ட எங்களது ஆலோசனைகள் கொண்ட பட்டியலை இத்துடன் இணைத்துள்ளேன். இதனை பரிசீலனை செய்து வாக்காளர் எளிதாக வாக்களிக்க சரியான வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும் இவ்வாறு கூறியிருந்தது. அப்போது வழக்கறிஞர் அணி மாநில துணைச் செயலாளர் விமல் சோமு(எ) சோமசுந்தரம், பேரவை மாவட்ட செயலாளர் ஆர். பிரபாகரன், பகுதி கழக செயலாளர்கள் டி.ஜெ. செல்வகுமார், எம்.ஜி.ஜெ. ராஜ்குமார், பாசறை மாவட்ட செயலாளர் பப்பாயா ராஜேஷ், வார்டு செயலாளர் ஒலம்பஸ் அழகேந்திரன், லக்ஷ்மணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



## ஜாகிர் அம்மாபாளையத்தில் அ.தி.மு.க. ஆலோசனை கூட்டம்!


சேலம், ஜன.10

சேலம் மாவட்டம் ஜாகிர் அம்மாபாளையத்தில், அதிமுக சார்பில் சட்டமன்ற தேர்தல் 2026 குறித்து, பொது மக்கள், தொழிலதிபர்கள், விவசாய சங்கத்தினர், தொழிற்சங்க அமைப்பினர், உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள்,உரிமையாளர்கள்,கலந்துகொண்டு தங்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை தெரிவித்தனர். இதில் அனைத்து ஏரிகள் இணைப்பு, சிறுதானிய உற்பத்திக்கு மானியம், தேங்காய் கொப்பரை அரசே நேரடி கொள்முதல் செய்தல், சிறு தொழில் உற்பத்தி மானியம் பத்தாயிரம் ரூபாய்வழங்குதல்,வெற்றிலைஆராய்ச்சி மையம், அனைத்து விவசாய கடன் தள்ளுபடி, மர சிற்பத்திற்கு புவிசார் குறியீடு, ஐடிஐயில் மரசிற்பம் குறித்த கல்வி, மேட்டூர் உபரி நீரை அனைத்து ஏரிகளுக்கும் நிரப்புதல், ஜவ்வரிசியை அனைத்து ரேஷன் கடைகளிலும் வழங்குதல், முட்டை ஏற்றுமதிக்கு தனிமண்டலம் மற்றும் தனி நல வாரியம், அரசுப் பள்ளிகளில் சத்துணவில் ஜவ்வரிசியை சேர்த்தல், ஒரு டன் கரும்புக்கு ஐந்தாயிரம், சாயப்பட்டறையை நிரந்தரமாக தடை செய்தல், நெசவாளர்களுக்கு மாத உதவித்தொகை, மாம்பழைக்குள் தயாரிப்பதற்கு மின் கட்டணம் சலுகை, மின்சாரத் துறையில் 20 ஆயிரம் காலிப் பணியிடங்களை நிரப்புதல், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை பொதுமக்கள், அதிமுக கருத்து கேட்டு குழுவினரிடம் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள், உதயகுமார், செம்மலை, வளர்மதி, நத்தம் விஸ்வநாதன், தங்கமணி, அன்பழகன், சிவி சண்முகம், பொள்ளாச்சி ஜெயராமன், சரோஜா, சேலம் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் இளங்கோவன் மற்றும் அதிமுக எம்எல்ஏக்கள் உள்ளிட்ட ஏராளமான அதிமுக நிர்வாகிகள், கலந்து கொண்டு, பொதுமக்களிடம் கருத்துக்களை கேட்டறிந்தனர்.




## Ai+ ஸ்மார்ட்போன், இணைக்கப்பட்ட தலைமுறைக்காக நோவா வாட்ச் என்ற ஸ்மார்ட் வாட்ச் சீரீஸ் அறிமுகப்படுத்துகிறது!

சென்னை, ஜன.10



Ai+ Smartphone நிறுவனம், இணைக்கப்பட்ட தலைமுறைக்காக வடிவமைக்கப்பட்ட தனது புதிய ஸ்மார்ட் வாட்ச் வரிசையான Nova Watchஐ இன்று அறிமுகப்படுத்தியது. பாதுகாப்பு, தினசரி வெல்னஸ் கண்காணிப்பு மற்றும் தனிப்பட்ட ஸ்டைலை ஒருங்கிணைக்கும் இந்த வரிசை, Ai+ நிறுவனத்தின் connected devices தொகுப்பை மேலும் விரிவுபடுத்துகிறது. Q1 2026ல் வெளியிடப்படவுள்ள Nova Watch, பயன்பாட்டு நுட்பத்தையும் ஃபேஷன் ஃபார்வர்டு வடிவமைப்பையும் இணைக்கும் அணியக்கூடிய தொழில்நுட்பம் என்ற நிறுவனத்தின் பார்வையை பிரதிபலிக்கிறது. Nova Watch வரிசையில் Active, Wearbuds, குழந்தைகளுக்கான Geofencing 4G Watch மற்றும் தொழில்துறையில் முதல் முறையாக அறிமுகம் ஆகும் சுழலும் கேமரா கொண்ட LTE Watch ஆகிய மாடல்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு மாடலும் தனித்தனி பயன்பாட்டு தேவைகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், ஆரோக்கிய கண்காணிப்பு, குடும்ப பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட வெளிப்பாடு ஆகியவற்றை ஒரே இடத்தில் வழங்குகிறது. இந்த வரிசை, பல்வேறு வயது குழுக்கள் மற்றும் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ற அணியக்கூடிய தீர்வுகளில் Ai+ நிறுவனத்தின் கவனத்தை வெளிப்படுத்துகிறது.

அறிவிப்பு பேசிய Ai+ Smartphone நிறுவனத்தின் CEO மற்றும் Nxt Quantum Shift Technologies நிறுவனர் மாதவ் ஷெத் கூறுகையில், "அணியக்கூடிய சாதனங்கள் இன்று அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. Nova Watch மூலம், தொழில்நுட்பம் மட்டுமல்லாமல் மனிதர்களின் வாழ்க்கை முறை, ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் ஸ்டைல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு வடிவமைப்பில் கவனம் செலுத்தியுள்ளார். ஃபேஷன் மற்றும் செயல்திறன் இரண்டையும் இணைக்கும் இந்த வரிசை, பயனர்களின் தினசரி வாழ்க்கைக்கு உண்மையான 'பிளஸ்' ஒன்றைச் சேர்க்கும்," என்றார்.

## ஜெனரேட்டிவ் AI மூலம் நிறுவன செயல்திறன் உயர்வு: இன்ஃபோசிஸ்–AWS அறிவிப்பு!

சென்னை, ஜன.10

உலகளாவிய டிஜிட்டல் சேவைகள் நிறுவனமான இன்ஃபோசிஸ், பெரு நிறுவனங்கள் ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (Gen AI) தொழில்நுட்பத்தை வேகமாக ஏற்றுக்கொள்ள உதவ, அமேசான் வெப் சர்வீஸ் (AWS) உடன் முக்கிய உத்திசார் கூட்டணி அறிவித்துள்ளது. இந்தக் கூட்டணியின் மூலம், இன்ஃபோசிஸ் 'டோபாஸ்' AI தளமும், AWSஇன் அமேசான் கியூ டெவலப்பர் ஒருங்கிணைக்கப்பட்டு, மென்பொருள் உருவாக்கம், மனிதவள மேலாண்மை, ஆள்சேர்ப்பு மற்றும் விற்பனையாளர் மேலாண்மை போன்ற முக்கிய செயல்பாடுகள் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுகிறது.

இதுகுறித்து AWS இந்தியா மற்றும் தெற்காசிய தலைவர் சந்தீப் தத்தா கூறுகையில், "இன்ஃபோசிஸ் மற்றும் AWS இணைந்து, பெரு நிறுவனங்கள் ஜெனரேட்டிவ் AIயை பொறுப்புடனும், பெரிய அளவில் பயன்படுத்துவதற்கான புதிய தர நிலையை உருவாக்கி வருகிறோம்" என்றார். இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் நிர்வாக துணைத் தலைவர் பாலகிருஷ்ணன் டி.ஆர். (பாலி) கூறுகையில், "இந்தக் கூட்டணி AIமுதன்மை சூழலை உருவாக்கி, நிறுவனங்கள் தங்களின் வணிக மாற்றத்தை வேகமாகவும் தாக்கம் உள்ளதாகவும் முன்னெடுக்க உதவும்" என்றார்.

## 5 முன்னணி தொழில்நுட்பப் புதுமைகளுடன் ரூ.13.66 லட்சத்தில் தொடங்கும் மஹிந்திரா எக்ஸ்யூவி 7எக்ஸ்ஓ –அறிமுகம்!

கோவை, ஜன.10.



இந்தியாவின் முன்னணி எஸ்யூவி தயாரிப்பாளரான மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் டிரெண்ட்செட்டரான புதிய எக்ஸ்யூவி 7எக்ஸ்ஓவை அறிமுகப்படுத்தியுள்ளது. ரூபாய் 13.66 லட்சம் (எக்ஸ்ஷோரூம்) ஆரம்ப விலையில் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. எக்ஸ்யூவி 7எக்ஸ்ஓ ஆனது 2021ல் அறிமுகப்படுத்தப்பட்டு 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள புரட்சிகரமான எக்ஸ்யூவி 700 மாடலின் மேம்பட்ட வெர்ஷனாகும்.மஹிந்திரா நிறுவனம் தொழில்நுட்பத்தை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது, மேலும் எக்ஸ்யூவி 7எக்ஸ்ஓ மாடலானது அடிப்படை வேரியண்டிலிருந்தே மேம்பட்ட அம்சங்களை வழங்குவதன் மூலம் இந்த உறுதிப்பாட்டை மேலும் எடுத்துக்காட்டுகிறது. ஏஎக்ஸ் வேரியண்டில், கோஸ்ட்டு கோஸ்ட் 31.24 செ.மீ டிரிபிள் ஹெச்டி திரைகள், இன்டெலிஜென்ட் ஆட்ரீநோக்ஸ், வயர்லெஸ் ஆண்ட்ராய்டு ஆட்டோ மற்றும் ஆப்பிள் கார்ப்ளே, சேட்ஜிபிடி உடன் ஒருங்கிணைக்கப்பட்ட அலெக்சா, க்ரூஸ் கண்ட்ரோல், புஷ் பட்டன் ஸ்டார்ட்/ஸ்டாப் மற்றும் 75 பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை அனைத்தும் தரநிலையாக வழங்கப்படுவதால், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பிரீமியம் அம்சங்கள் முன்னெப்போதையும் விட எளிதில் அணுகக்கூடியதாக மாறியுள்ளன. மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் வணிகப் பிரிவுத் தலைவர் ஆர். வேலுசாமி கூறியதாவது: "எக்ஸ்யூவி 7எக்ஸ்ஓ என்பது ஒரு உண்மையான பிரீமியம், தொழில்நுட்பத்தில் மேம்பட்ட எஸ்யூவியை வழங்குவதில் எங்களின் அடுத்த படியாகும். இது சிறந்த பயணத்தையும், துல்லியமான எதிர்வினையையும், புத்திசாலித்தனமான அனுபவத்தையும் வழங்குகிறது. குவால்காம் ஸ்னாப்டிராகன் எஸ்ஏ8155பி மூலம் இயக்கப்படும் ஆட்ரீநோக்ஸ் +, இந்தியாவில் ஒரு ஐசிஇ வாகனத்தில் இந்த சிப்செட் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். இது விதிவிலக்கான கணினி வேகத்தையும் துரித எதிர்வினையையும் செயல்படுத்துகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# உளுந்தூர்பேட்டை கிழக்கு கந்தசாமிபுரத்தில் பொங்கல் பரிசுத் தொகை; மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

உளுந்தூர்பேட்டை, ஜன.10

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி கிழக்கு கந்தசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள நியாய விலை கடையில் தமிழக முதல்வர் அறிவித்த பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் 3000 மற்றும் பொங்கல் தொகுப்புகள் பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் 3000 மற்றும் பொங்கல் தொகுப்புகளை வழங்கினார். தமிழக அரசு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், பண்டிகை காலங்களில் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இத்தகைய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ், ஒன்றிய சேர்மன் ராஜவேல் ஆகியோர் கலந்து கொண்டு, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களின் முக்கியத்துவம் குறித்து பேசினர்.

இதில் உளுந்தூர்பேட்டை நகர மன்ற உறுப்பினர்கள் மாலதி இராமலிங்கம், செல்வகுமாரி இரமேஷ்பாபு, கலா சுந்தரமூர்த்தி, சிவசங்கரி சந்திரகுமார், மனோபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகை மற்றும் பொங்கல் தொகுப்புகளை பெற்றுச் சென்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக்கரும்புமற்றும்ரூ.3,000/ரொக்கம்ஆகியவற்றைவழங்கிடும்பணியினைதொடங்கிவைப்பதன்அடையாளமாக,அரிசிகுடும்பஅட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் கிளைவ் பேட்டரி, மிராலி தெரு, நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/ம் ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் இசட் ஆசாத் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# போச்சம்பள்ளி அரசு பள்ளியில் மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான அறிவியல் போட்டி!

கிருஷ்ணகிரி, ஜன.10

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அரசு பள்ளியில் பர்கூர் சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் செய்யார் செஸ் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஃபேர்வே எண்டர்பிரைசஸ் லிமிடெட் (யூனிட் 1, 2) ஆகிய நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் (CSR) கீழ், பள்ளி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான அறிவியல் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 60 அரசுப் பள்ளிகளிலிருந்து சுமார் 700 மாணவ, மாணவியர்கள் தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தினர். சிறந்த அறிவியல் மாடல் கண்காட்சியை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் வாழ்த்து தெரிவித்து பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயலட்சுமி, போச்சம்பள்ளி வட்டாட்சியர் அருள், செய்யார் செஸ் டெவலப்பர்ஸ்நிறுவனத்தின்முதன்மைதலைமை இயக்குனர் மணிமாறன் அருணாச்சலம், பொது மேலாளர் ஜெயராஜ் பாபு, செய்யார் செஸ் டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் அருள் மகாவிஷ்ணு, வெளியுறவுத் துறை உதவி மேலாளர் டேவிட் ராஜன், ஃபேர்வே எண்டர்பிரைசஸ் நிறுவன நலச் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும், அறிவியல் சிந்தனையை வளர்க்கவும் தனியார் நிறுவனங்கள் முன்னெடுத்த இந்த முயற்சிக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.



# வெண்ணம்பள்ளி அரசுப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டம் காங். துணை தலைவர் பி.சி. சேகர் தலைமையில் நடைப்பெற்றது!

கிருஷ்ணகிரி, ஜன.10

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட வெண்ணம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் மற்றும் அரை ஆண்டு முடியு வகுப்பாயவு கூட்டம் பள்ளியின் தலைமை ஆசிரியர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவ பி.சி சேகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பள்ளியின் செயல்பாடுகள் மற்றும் பள்ளியின் தேர்ச்சி குறித்து சிறப்புரை ஆற்றினார் , மேலும் இப்பள்ளி பத்தாம் வகுப்பு அரசு பெது தேர்வில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக 100% தேர்ச்சி பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. தற்போது அரை ஆண்டு தேர்வு முடிந்துள்ளது, இதில் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுத்து உள்ளது மிகவும் பாராட்டத்திற்கு உரியது, அதுபோல் வருகின்ற ஏப்ரல் மாதம் நடைப்பெற உள்ள முழு ஆண்டு தோர்வான பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் இப்பள்ளியில் படிக்கின்ற மாணவ மாணவிகள் நன்கு படித்து தொடர்ந்து 16வது ஆண்டுகளாக 100% தேர்ச்சி பெற்றபள்ளி என்பதை நிரூபிக்க வேண்டும், அதற்கு ஆசிரியர்கள் மட்டும் போதாது பெற்றோர்களாகிய நீங்களும் தங்கள் குழந்தைகளை உறுதுணையாக இருந்து படிப்பதை கவனித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

அப்போதுதான் வருகின்ற 10ம் வகுப்பு அரசு தேர்வில் 100% தேர்ச்சி பெறமுடியும் என்பதை உணர்ந்து அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அப்போது பள்ளியின் ஆசிரியர்களான சகாயஆரோக்கியராஜ், அமலா அரோக்கியமேரி, சிவகுமார், சதிஷ், முனிராஜ், தனஜெயன் திருமதி சுபாசினி உள்ளிட்ட பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

# கோவையில் ரூ.2.43 லட்சம் மோசடி!

கோவை, ஜன. 10

கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள பைக் ஷோரூமில் மேலாளராக பணிபுரிந்து வருபவர் சலீம் (57). அங்கு விற்பனை பிரிவில் பணிபுரிந்து வந்தவர் கரும்புக்கடையை சேர்ந்த முகமது சேரிப் (29).

இந்த நிலையில் முகமது சேரிப், பைக் வாங்கிய வாடிக்கையாளர்களிடம் பணத்தை பெற்று ஷோரூமில் செலுத்தாமல் இருந்து வந்துள்ளார்.

மேலும், அவர் நிர்வாகத்திற்கு தெரியாமல் வாடிக்கையாளர்கள் எக்சேஞ்க்கு கொண்டு வரும் வாகனங்களை வெளியே விற்று பணத்தை பெற்று வந்துள்ளார். இவ்வாறு அவர் தொடர்ந்து ஏமாற்றி வந்ததை கண்டு பிடித்த நிர்வாகத்தினர் அவரிடம் விசாரணை நடத்தினர். அதில் அவர் 5 வாடிக்கையாளர்களிடம் ரூ.2 லட்சத்து 43 ஆயிரத்து 127ஐ பெற்று மோசடி செய்து இருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து மேலாளர் சலீம் சிங்காநல்லூர் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் முகமது சேரிப் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓடும் பஸ்சில் ரூ. 50 ஆயிரம் அபேஸ்!

கோவை, ஜன. 10

கோவை தடாகம் பகுதியை சேர்ந்தவர் கார்த்திகா (32). இவர் நகை வாங்குவதற்காக ரூ.50 ஆயிரத்தை எடுத்து கொண்டு தனியார் பஸ்சில் கனுவாயில் இருந்து கோவில்மேடு வந்தார். கோவில்மேடு வந்ததும் கார்த்திகா பஸ்சில் இருந்து இறங்கினார்.

அப்போது தனது கைப்பையை பார்த்த போது அதில் இருந்த பணம் காணாமல் போயிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து கார்த்திகா சாய்பாபா காலனி போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பஸ்சில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பணத்தை திருடிய மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

# பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்த இலங்கையை சேர்ந்தவர் கோவையில் கைது!

கோவை, ஜன. 10

கோவை போத்தனூர் போலீஸ் ஸ்டேஷனில் தலைமை காவலராக பணிபுரிந்து வருபவர் சுரேஷ். இவர் பாஸ்போர்டுக்கு விண்ணப்பித்தவர்களின் விவரங்களை சேகரித்து விசாரித்து வந்தார். அதேபோல வெள்ளலூர் பகுதியை சேர்ந்த சிவக்குமார் (56) என்பவர் விண்ணப்பித்து இருந்த பாஸ்போர்ட் குறித்து அவரை நேரில் சந்தித்து விசாரணை நடத்தினார்.

அதில் அவர் இலங்கையை சேர்ந்தவர் என்பதும், இந்தியாவில் அத்துமீறி நுழைந்தவர் என்பதும் தெரியவந்தது. புகாரின் பேரில் போலீசார் இந்திய அரசை ஏமாற்றி அத்துமீறி நுழைந்த சிவக்குமார் மீது வழக்கு பதிவு செய்தனர். தொடர்ந்து அவரை கைது செய்து, கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைந்தனர்.

# முதல் SIF முதலீட்டு வழிமுறை வெளியிட்ட அருதா SIF!

சென்னை, ஜன.10

பந்தன் மியூச்சுவல் ஃபண்டின் அருதா SIF, தனது முதல் SIF முதலீட்டு தயாரிப்பாக 'அருதா ஹைப்ரிட் லாங்–ஷார்ட் ஃபண்ட்'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இடைவேளை முதலீட்டு திட்டம், அபாய மேலாண்மை மற்றும் வரிவிதிப்பிற்குப்பிந்தைய செயல்திறனைமையமாகக்கொண்டு, குறுகிய முதல் நடுத்தர கால கடன் கருவிகளும், சந்தை சார்பற்ற ஈக்விட்டி உத்தியும் இணைந்த ஒரு கட்டமைக்கப்பட்ட முதலீட்டு அணுகுமுறையை வழங்குகிறது.

இதுகுறித்து பந்தன் AMC லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி விஷால் கபூர் கூறுகையில், இந்த SIF உயர்ந்த முதலீட்டு அறிவும் அனுபவமும் கொண்ட HNIs, நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் குடும்ப அலுவலகங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டதாக தெரிவித்தார். உயர்தர கடன் முதலீடுகள் மற்றும் முழுமையாக ஹெட்ஜ் செய்யப்பட்ட சந்தை சார்பற்ற ஈக்விட்டி நிலைகள் மூலம், வரி செயல்திறனுடன் கூடிய நிலையான வருமானத்தை வழங்குவதே இதன் நோக்கம் என்றார். திட்டத்தின் கீழ், அதிகபட்சம் 65% வரை கடன் மற்றும் பண சந்தை கருவிகளிலும், குறைந்தபட்சம் 35% முழுமையாக ஹெட்ஜ் செய்யப்பட்ட ஈக்விட்டி முதலீடுகளிலும் ஒதுக்கீடு செய்யப்படும்.



தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்சென்னை,பட்ரோடுநியாயவிலைக்கடையில், பொங்கல்பரிசுதொகுப்பாகஒருகிலோபச்சரிசி,ஒருகிலோசர்க்கரை,முழுக்கரும்புமற்றும் ரூ.3,000/ ரொக்கம் மற்றும் வேட்டி, சேலைகளை வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் அவர்கள்,அடையாறுமண்டலம்,சைதாப்பேட்டை,காமராஜபுரம்நியாயவிலைக்கடையில் அரிசிகுடும்பஅட்டைதாரர்களுக்குதலாஒருகிலோஅரிசி,ஒருகிலோசர்க்கரை,ஒருமுழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/ ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககம் சார்பில் பள்ளி கல்வித்துறை ஆசிரியர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு HPV தடுப்பூசிக்கான மாவட்ட அளவிலான பயிலரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், தலைமையில், தேசிய நல குழுமத்தின் குழும இயக்குநர் அ.அருண்தம்புராஜ் முன்னிலையில் நடைபெற்றது. உடன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர்அ.சோமசுந்தரம், பொது சுகாதார துறையின் மாநிலதடுப்பூசிஅலுவலர்(ம)இணைஇயக்குநர்கி.வினய்குமார்உள்ளிட்டதொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற சிறுபான்மையினர் உரிமைகள் தினவிழாவில் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா வழங்கினார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன், வட்டாட்சியர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட உப்பிலிபாளையம், ஆடிஸ் வீதி பகுதியில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு பங்கேற்கும் வகையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.



# கவுண்டனூர் நியாய விலைக்கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு வினியோம்!

## கவுன்சிலர் முத்துசாமி தொடங்கி வைத்தார்!!

தர்மபுரி,ஜன.10

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு, ஒன்றியம், பி.செட்டி அள்ளி ஊராட்சி, கவுண்டனூர் நியாய விலைக்கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் முத்துசாமி தொடங்கி வைத்தார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை சிறப்பாக கொண்டாடும் நோக்கில் தர்மபுரி மாவட்டத்தில் செயல்படும் 1106 நியாய விலை கடைகள் மூலம் பரிசு தொகுப்பு பெற தகுதியுள்ள 4,75,621 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவதற்காக தமிழக அரசால் மொத்தம் ரூ 147.96 கோடி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாக ரொக்க பணம் ரூ.3000, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, சேலை, வேட்டி மற்றும் முழுக் கரும்பு ஆகியவை கொண்ட பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டது, அதனை தொடர்ந்து பாலக்கோடு அடுத்த கவுண்டனூர் கிராமத்தில் பயனாளிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் பைரவன், நாகராஜ், அர்ஜுனன், குமரவேல், ராமன், ராஜீ, சின்ராஜீ, அமுதா, கிருஷ்ணம்மாள், சின்னசாமி, சரசு, ஊர் கவுண்டர் அருள்பாண்டி, மந்திகவுண்டர் ராமன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஓசூரில் விரிவாக்கம் செய்யப்பட்ட நூலகம் மற்றும் நியாய விலை கடையை ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ, மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் திறந்து வைத்து ரேசன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை ரூ.3 ஆயிரம் ரொக்கத்துடன் வழங்கினர்.

# ஓசூரில் பொங்கல் பரிசு தொகுப்பு!

## எம்.எல்.ஏ., மேயர் வழங்கினர்!!

ஓசூர், ஜன 10

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் , குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/ம் ரொக்கத்துடன் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து ஒசூர் சட்டமன்ற தொகுதி ஒசூர் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் கிராமத்தில் உள்ள நியாய விலை கடையில் தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும், வேட்டி சேலையுடன் ரூ. 3000/ம் ரொக்கத்தை பொதுமக்களுக்கு மாவட்ட செயலாளரும் ஒசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் வழங்கினார்.

இதனை தொடர்ந்து ஒசூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நீதியிலிருந்து 37வது வார்டு எஸ்.பி.எம் காலணியில் நூலகம் விரிவாக்கம் (ம) நியாய விலை கடை விரிவாக்கம் செய்யப்பட்ட கட்டிடத்தை ஒசூர் எம்எல்ஏ ஒய் பிரகாஷ் மற்றும் மேயர் எஸ்.ஏ. சத்யா திறந்து வைத்தனர்..மேலும்குடும்பஅட்டைதாரர்களுக்கு பச்சரிசி.சர்க்கரை,முழு நீள கரும்பு வேட்டி – சேலையுடன் , ரூ.3000 ரொக்கப்பணம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கினர். இந்த நிகழ்வை 37வது உறுப்பினரும் வரி மற்றும் நிதி குழு தலைவருமான சென்னீரப்பா ஏற்பாடு செய்து இருந்தார்.

இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், காங்கிரஸ் பிரமுகர்கள், திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



## வாணியம்பாடி அருகே

# ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி!

வாணியம்பாடி, ஜன.10

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி துவக்க விழா சூரியா நியூ ஜன் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் தலைமை வகித்தார். ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொருளாளர் வி.ஜி. அன்பு, தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.பெருமாள் கோவிந்தம்மாள், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன்,மேற்கு ஒன்றிய இளைஞரணி கே.ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அவைத் தலைவர் எம்.சி. ராமநாதன் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு வீரர்களை அறிமுகம் செய்து வைத்து கிரிக்கெட் விளையாடி போட்டிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய பொருளாளர் எம்.சி.தசரதன், துணைச் செயலாளர் டி. குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் செந்தில், பள்ளியின் தாளாளர் நாராயணன் சூரிய உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இதில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ்.ஞானவேலன் சார்பில் ரூபாய் 25 ஆயிரம் ரொக்கம், இரண்டாவது பரிசாக மேற்கு ஒன்றிய இளைஞரணி கே.ஞான சேகரன் சார்பில் ரூபாய் 15 ஆயிரம் ரொக்கம், 3வது பரிசு பெறும் அணிக்கு ரூபாய் 10 ஆயிரம், 4 வது பரிசாக ரூபாய் 5 ஆயிரம் ரொக்கத்தை மேற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ்.ஞானவேலம் வழங்க உள்ளார்.

# தொழிலதிபரை கொன்று தப்பிய கும்பலுக்கு வலைவீச்சு!

## கெலமங்கலம் போலீசார் தீவிரம்!!



கிருஷ்ணகிரி,ஜன.10

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட குந்துமாரண ப் பள்ளி கிராமத்தை சேர்ந்த குருபிரசாத்(31), திருமணமாகாத இவர் ரியல் எஸ்டெட் தொழில் செய்து வந்தார்.

இவர் புதியதாக வீடு கட்டி வருவதால் அதே பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். இவரும் இவரது தாயாரும் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தனர் அப்போது குரு பிரசாத்துடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த மேக்கலகவுனூர் கிராமத்தை சேர்ந்த பாபுவுடன் சேர்ந்து 3 பேர் வீட்டின் கதவை தட்டி அழைத்துள்ளனர். அவரது தாயார் முனிரத்தினம்மா கதவை திறந்த போது குருபிரசாத்தி டம் பேச வேண்டுமென தனியாக அழைத்து சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதை கண்ட குருபிரசாத்தி ன் தாயார் முனிரத்தினம்மா ஏதோ அசம்பாவிதம் நடக்கபோகிறது என்று நினைத்து கிராமத்தினரை அழைத்து வர சென்றுள்ளார், அதற்குள் பாபு மற்றும் அவரது கூட்டா ளிகளும், குருபிரசாத்தை கத்தியால் சாராமாரியாக குத்தி விட்டு தலைமறைவாகினார்.

இதில் குரு பிரசாத ரத்த வெள்ளத்தில் பலியானார், இதுக் குறித்து தகவலறிந்து வந்த கெலமங்கலம் போலீசார் குரு பிரசாத் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து கொலையாளிகளை வலைவீசி தேடி வருகின்றனர். முதற்கட்ட விசாரசையில் ரியல் எஸ்டெட் செய்து வந்தவர்களுக்கு இடையே பணம் கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என தெரியவந்ததாக போலீஸ் தரப்பில் கூறப்பட்டது.

## ராசிபுரம் அருகே

# கார் மோதி பெண் பலி!

ராசிபுரம், ஜன.10

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த அணைப்பாளையத்தை சேர்ந்தவர் சின்னான் மனைவி லட்சுமி, 60. ஆண்டலூர் கேட்பகுதியில் உள்ள தனது பேத்தியை பவித்ராவை நேரில் பார்த்து நலம் விசாரிக்க சென்றார் . பின்பு மீண்டும் வீடு திரும்பும் போது ஆண்டகளுர் கேட் அருகே உள்ள சர்வீஸ் ரோட்டில் நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்னால் வேகமாக வந்த கார் மோதியது. இதில், தூக்கி வீசப்பட்ட லட்சுமி, பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ராசிபுரம் போலீசார், லட்சுமி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குண்டர் சட்டத்தில் பெண் கைது!

கோபி, ஜன.10–

கோபி அருகே உள்ள கொங்கர்பாளையம் முத்துகருப்பன் வீதியை சேர்ந்தவர் ஆறுமுகம். இவருடைய மனைவி தேவி (57). கடந்த சில நாட்களுக்கு முன்பு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக தேவியை கோபி மதுவிலக்கு போலீசார் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்த னர். இந்த நிலையில் தொடர்ச்சியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த தேவியை குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்ய ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா, மாவட்ட கலெக்டர் கந்தசாமிக்கு பரிந்துரை செய்தார்.

அதன்பேரில் குண்டர் சட்டத்தில் தேவியை கைது செய்ய கலெக்டர் உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து கோவை மத்தியமகளிர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் தற்காப்பு பயிற்சி நிறைவு விழா!




தருமபுரி,ஜன.10

தருமபுரி வெள்ளோலை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் மூலம் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டது பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு தற்காப்பு கலை மிகவும் அவசியம்.இதற்காக சிலம்பம் தற்காப்பு பயிற்சியை பள்ளிக்கல்வித்துறையின் வழிகாட்டுதலின் படி வாரம் இரண்டு வகுப்புகள் வீதம் மூன்று மாதங்கள் 24 வகுப்புகள் சிலம்ப பயிற்சி அளிக்கப்பட்டது. சிலம்பம் பயிற்சியாளர் முருகன் மாணவிகளுக்கு பயிற்சியை வழங்கினார் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர் தலைமை ஆசிரியர் மற்றும் அவர்களின் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.



# வாணியம்பாடியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் சமுத்துவ பொங்கல் விழா!

வாணியம்பாடி, ஜன.10

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வாரச்சந்தை பகுதியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் சமுத்துவ பொங்கல் விழா கொண்டாடபப்பட்டது.

விழாவுக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்ட செயலாளர் கே.பி.எஸ்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் சி.கே. சுபாஷ், பொருளாளர் செந்தில் முருகன், ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் குமரகுரு, சீமாட்டி சாபத்தீன், வெங்கட்ராமன், சீனிவாசன், மாவட்ட இளைஞரணி செயலாளர் அருண்குமார், வினோத் ஸ்ரீதரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.செல்வமணி அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில் குமார், திமுக நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் ஆகியோர் கலந்து கொண்டு வியாபாரிகள், வணிகர்கள்மற்றும் பொதுமக்களுடன் இணைந்து தமிழர்களின் பாரம்பரிய சிலம்பாடத்தை ஆடி விழாவை கொண்டாடினர்.

நிகழ்ச்சியில் டாக்டர் பசுபதி, அஹமத் ஸ்வீட் சையத் சிராஜ் அஹமத், காஜா ஹோட்டல் கலீம், தாஜ் ஹோட்டல் நபீல் அஹ்மத், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள், உறுப்பினர்கள், காய்கறி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள், ஆகியோர் இணைந்து புதுப்பானையில் அரிசு, வெல்லம் இட்டு பொங்கல் வைத்து பொங்கலோ பொங்கலஎனகோஷமிட்டுபொங்கல்விழாவை கொண்டாடி இனிப்புகளை பகிர்ந்து கொண்டனர். முடிவில் செய்தி தொடர்பாளர் பத்மநாபன் நன்றி கூறினார்.



# கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 80வது வார்டில் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம்!

கோவை,ஜன.10

கோவைதமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக கோவை மாநகராட்சி மத்திய மண்டலம், 80வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொதுமக்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா மேள தாளங்கள் முழங்க,பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில், கோவை மாநகராட்சி பொது சுகாதாரக் குழுத் தலைவரும், 80வது வார்டு மாமன்ற உறுப்பினருமான பெ.மாரிசெல்வன் அவர்கள் பொதுமக்களுக்குப் பொங்கல் பரிசுப் பொருட்களான பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரொக்கப் பணம் 3000 ரூபாய் ஆகியவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில தீர்மானம் குழு இணை செயலாளர் பா.நாச்சிமுத்து, பகுதி பொறுப்பாளர் என்.ஜே. முருகேசன், வார்டு செயலாளர் நா. தங்கவேலன், மற்றும் வார்டு கழக நிர்வாகிகள், நியாய விலைக் கடை ஊழியர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# உதயேந்திரம் பேரூராட்சியில் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/ வழங்கும் விழா!

வாணியம்பாடி ஜன.10

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூராட்சியில் பொங்கல் பரிசுத் தொகை மற்றும் ரூபாய் 3000/வழங்கும் விழா நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளர்கள் பேரூராட்சி மன்ற தலைவர் ஆ.பூசாராணி, உதயேந்திரம் பேரூர் திமுக க செயலாளர் ஆ.செல்வராஜ் கலந்துகொண்டு கூட்டுறவு கடை விற்பனையாளர்கள் வில்சன் தீர்த்தமலை கமல் முன்னிலையில், உதயேந்திரம் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட உதயேந்திரம், மேட்டு தெரு, மேட்டுப்பாளையம் நியாய விலைக் கடைகளில் பொங்கல் தொகுப்பு வேட்டி, சேலை, அரிசி, கரும்பு,சர்க்கரை மற்றும் ரூபாய் 3000 பொங்கல் பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் குமார், அம்பலவாணன், கோவி. அசோகன், மீர் முகமதுகனி, மேகநாதன், ஜோசப், தாஸ், சசிகுமார், உமா பழனி ரமேஷ் செந்தில் இளங்கோ சௌந்தர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கோவிந்தராஜ் மரிய ஜோசப் அட்வகேட் ரஞ்சனி ராஜ்குமார் சந்தியா பழனி மகேஸ்வரி ராஜா ஒருங்கிணைப்பாளர்கள் தென்றல் தமிழரசன் இசை குமார் சி எஸ் பாபு இளையா ஆனந்தன் வெங்கடேசன் இளைஞரணி சிலம்பரசன் மதன் குமார் அருண் வினோத்குமார் மாணவர் அணி திவாகர் பாண்டியன் திலக கழக செயலாளர் ரவி சீனிவாசன் சுகுமார் சரவணன் பழனி புஷ்பாலூர்து நாதன் இம்மானுவேல் காசிரவி சோமன் னன் தட்சிணாமூர்த்தி முனுசாமி முருகன், ராஜ்குமார் சிட்டிபாபு கழக அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# கெங்கவல்லி போலீஸ் நிலையத்தில் காதல்ஜோடி தஞ்சம்!

தம்மம்பட்டி, ஜன. 10

கூலித்தொழிலாளியை காதல் திருமணம் செய்து கொண்ட கல்லூரி மாணவி, இருவரும் பாதுகாப்பு கேட்டு, கெங்கவல்லி போலீசில் தஞ்சமடைந்தனர்.

கெங்கவல்லி அருகே கடம்பூர் திருவள்ளுவர் நகரை சேர்ந்த கிருஷ்ணன் மகன் லோகநாதன் (25),கூலித்தொழிலாளி. ஆத்தூர் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த சுப்ரமணியன் மகள் ஜனனி (19),கெங்கவல்லியில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் படிக்கிறார்.

இருவரும், இரு ஆண்டாக காதலித்த நிலையில், இருவீட்டு பெற்றோரும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் வீட்டை விட்டு வெளியேறி, இருவரும் திருமணம் செய்துகொண்டனர். இந்நிலையில்,நேற்று தங்களுக்கு பாதுகாப்பு கேட்டு, கெங்கவல்லி போலீசில் தஞ்சமடைந்தனர்.

இருவீட்டு பெற்றோரை அழைத்து போலீசார் பேச்சு வார்த்தை நடத்தி லோகநாதனுடன், ஜனனியை அனுப்பி வைத்தனர்.